பக்கங்கள் 19+3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2057 | வைகாசி 22 திங்கட்கிழமை 26.05.2025 | அதிர்வு 296

## மஹிந்தானந்த பிணையில் விடுவிப்பு!



முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே வைப் பிணையில் விடுதலை செய்ய கொழும்பு நீதிவான் 3

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# ஓமந்தையில் அதிகாலை கோர விபத்து! இந்தியத் துணைத் தூதரக அதிகாரி பலி!!

## அவரின் மனைவி, மகன், மாமனார் படுகாயம்

(கி.வசந்தன்)

**வவுனியா, ஓமந்தைப் பகுதியில் இன்று அதிகாலை இடம்பெற்ற விபத்தில் கணவன் உயிரிழந்துள்ளதுடன் மனைவி, மகன் மற்றும் மாமனார் ஆகியோர் படுகாயமடைந்துள்ளனர்.**

**இந்த விபத்தில், யாழ்ப்பாணம் இந்தியத் துணைத் தூதரக அதிகாரி பிரம்மஸ்ரீ சச்சிதானந்தக் குருக்கள் பிரபாகரன் சர்மாவே (வயது 52) உயிரிழந்துள்ளார்.**

இந்தியத் துணைத் தூதரக அதிகாரி தனது தனிப்பட்ட விஜயமாக வட இந்தியா இமயமலை சாரலுக்கு வழிபாட்டுக்காகச் சென்றுவிட்டு கட்டுநாயக்கா விமான நிலையம் ஊடாக நாடு திரும்பி யாழ்ப்பாணத்துக்குக் காரில் வந்து கொண்டிருந்த வேளை டிப்பர் வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளார்.

விபத்தின் போது காரைச் செலுத்தி வந்த யாழ். வடமராட்சி – நெல்லியடியைச் சேர்ந்த பிரபாகரன் சர்மா சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

அவரின் மனைவியான யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விரிவுரையாளர் பி.சீத்தாலட்சுமி (வயது – 50), மகன் பி.அக்ஸய் (வயது 27), மாமனார் சுவாமிநாதன் ஐயர் (வயது – 70) ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட போது வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து தொடர்பில் ஓமந்தைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.








### உள்ளூராட்சி சபைகளில் முதல்வர், தவிசாளர் தெரிவுகளின்போது

# கூடிய ஆசனங்களைப் பெற்ற தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு தமிழ்த் தேசியப் பேரவை ஆதரவு

## கஜேந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு

**(எஸ்.நிதர்ஷன்)**

"தமிழர் தாயகத்தில் உள்ளூராட்சி மன்றங்களில் கூடிய ஆசனங்களைப் பெற்ற அல்லது சமமான ஆசனங்களைப் பெற்றிருப்பின் கூடுதல் வாக்குகளைப் பெற்ற தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு மாநகர முதல்வர் மற்றும் தவிசாளர் தெரிவுகளில் தமிழ்த் தேசியப் பேரவை ஆதரவு வழங்கும்."

– இவ்வாறு தமிழ்த் தேசியப் பேரவையின் தலைவரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

அதேபோன்று உள்ளூராட்சி மன்றங்களில் இரண்டாவது நிலையில் கூடிய ஆசனங்களைப் பெற்ற அல்லது சமமான ஆசனங்களைப் பெற்றிருப்பின் கூடுதல் வாக்குகளைப் பெற்ற தமிழ்த் தேசியக் கட்சிகளுக்குப் பிரதி முதல்வர் மற்றும் உப தவிசாளர் தெரிவுகளில் தமிழ்த் தேசியப் பேரவை ஆதரவு வழங்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் யாழ். கச்சேரி அருகாமையிலுள்ள வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் தமிழ்த் தேசியப் பேரவையின் தலைவர்கள் மற்றும் தமிழ்த் தேசியப் பேரவையின் சார்பில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் பெயரிலும் அதன் சைக்கிள் சின்னத்திலும் போட்டியிட்டு வெற்றி பெற்ற உறுப்பினர்கள் மற்றும் கட்சிக்குக் கிடைக்கப் பெற்ற மேலதிக ஆசனங்கள் மூலம் கட்சியினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் கூடிக் கலந்துரையாடி கொள்கை அடிப்படையில் ஒருமனதாக மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் மக்களின் வெளிப்பாடு, சபைகளின் ஆட்சி நிர்வாகத்தை அமைப்பதில் மக்களின் தற்போதைய எதிர்பார்ப்பு என்பவற்றைக் கருத்தில் கொண்டு தமிழ்த் தேசிய ப் பேரவை இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

இந்தத் தீர்மானத்துக்கமைய பின்வரும் முடிவுகள் தமிழ்த் தேசியப் பேரவையின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தால் அறிவிக்கப்பட்டன.

தீர்மானத்துக்கு அமைய எடுக்கப்பட்ட முடிவுகள் வருமாறு:-

மாநகர சபைகள் உட்பட தமிழர் தாயகத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கு நடந்து முடிந்த தேர்தலில் கூடிய ஆசனங்களைப் பெற்ற அல்லது சமமான ஆசனங்களைப் பெற்ற சபைகளில் கூடுதல் வாக்குகளைப் பெற்ற தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு முதல்வர், தவிசாளர் தெரிவுகளில் ஆதரவு வழங்குவதுடன் அவ்வாறான சபைகளுக்கான முதல்வர், தவிசாளர் தெரிவுகளில் தமிழ்த் தேசியப் பேரவை போட்டியிடமாட்டாது.

அதேபோன்று தமிழ்த் தேசியப் பேரவை அதிகூடிய வாக்குகளைப் பெற்ற சபைகளில் தவிசாளர் தெரிவுக்குப் போட்டியிடும். அதன்போது மக்கள் தேர்தலில் வழங்கிய ஆணைக்கு மதிப்பளிக்கும் வகையில் ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகள் ஆதரவு வழங்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

பெற்றுக்கொண்ட வாக்குகளின் எண்ணிக்கையில் தமிழ்த் தேசியப் பேரவை இரண்டாவது நிலையில் இருக்கும் சபைகளில் துணை முதல்வர், உப தவிசாளர் பதவிகளுக்குப் போட்டியிடும்.

பெற்றுக்கொண்ட வாக்குகளின் எண்ணிக்கையில் இரண்டாவது நிலையில் இருக்கும் தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு துணை முதல்வர், உப தவிசாளர் தெரிவுக்குத் தமிழ்த் தேசியப் பேரவை ஆதரவு வழங்கும்.

எந்தவொரு நிலையிலும் சிங்களப் பௌத்த பேரினவாதக் கட்சிகளுக்கும் அவற்றுக்கு ஆதரவான கட்சிகளுக்கும் இவ்வாறான பதவிகளுக்கான தெரிவுகளுக்கு ஆதரவு வழங்கப்படமாட்டாது.

இவற்றின் மூலம் உள்ளூராட்சி சபைகளின் ஆட்சி நிர்வாகத்தைத் தமிழ்த் தேசியக் கட்சிகளின் கைகளில் வைத்திருப்பதுடன் எதிர்காலத்தில் எவ்வித இடையூறுகளும் இல்லாது மக்களுக்கான பணிகளைச் சிறப்பாகச் செய்ய முடியும் என்று தமிழ்த் தேசியப் பேரவை எதிர்பார்ப்பதுடன் இதன் மூலம் கட்சிகளுக்கிடையே புரிந்துணர்வை வளர்க்க முடியும் என்றும் தமிழ்த் தேசியப் பேரவை நம்புகின்றது.

# மேர்வின், பிரசன்ன உட்பட ஐவருக்கு மறியல் நீடிப்பு!

முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா மற்றும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர ஆகியோர் உட்பட ஐவரை எதிர்வரும் ஜுன் மாதம் 9ஆம் திகதி வரை மீண்டும் விளக்க மறியலில் வைக்குமாறு மஹர நீதிவான் நீதிமன்றம் இன்று திங்கட்கிழமை உத்தரவிட்டுள்ளது.

சந்தேகநபர்கள் ஐவரும் இன்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கிரிபத்கொடை பிரதேசத்தில் உள்ள காணி ஒன்றுக்குப் போலி ஆவணங்களைத் தயாரித்து பண





மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் மேர்வின் சில்வா மற்றும் பிரசன்ன ரணவீர ஆகியோர் கைது செய்யப்பட்டு தொடர்ந்து விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# மோட்டார் சைக்கிள் விபத்தில் இரு இளைஞர்கள் உயிரிழப்பு!

## வாகரையில் நேற்று இரவு துயரம்

**(கனகராசா சரவணன்)**

மட்டக்களப்பு மாவட்டம், வாகரை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பனிச்சங்கேணி பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர்கள் இருவர் உயிரிழந்துள்ளனர்.

மூன்று மோட்டார் சைக்கிளில் 6 நண்பர்கள் கிண்ணியாவுக்குச் சென்றுவிட்டு ஓட்டமாவடி பகுதியை நோக்கி வந்தபோது ஒரு மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கியுள்ளது. இதன்போது அதில் பயணித்த இளைஞர்கள் இருவர் உயிரிழந்துள்ளனர்.

மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து பனிச்சங்கேணி பாலத்துடன் மோதியுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதில், ஓட்டமாவடி – பதுரியா நகர், ஆலையடி பகுதி மற்றும் ஓட்டமாவடி, சூடுபத்தினசேனை பகுதியைச் சேர்ந்த 19 வயதுடைய இரண்டு இளைஞர்களே உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்த இளைஞர்களின் சடலங்கள் வாகரை வைத்தியசாலையில் வைக்கப்பட்டு பின்னர் பிரேத பரிசோதனைக்காக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டன.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**மஹிந்தானந்த...**

நீதிமன்றம் இன்று திங்கட்கிழமை காலை உத்தரவிட்டுள்ளது.

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த மஹிந்தானந்த அளுத்கமகே சிறைச்சாலை அதிகாரிகளால் இன்று காலை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2021ஆம் ஆண்டில் விவசாய அமைச்சராக மஹிந்தானந்த அளுத்கமகே கடமையாற்றியபோது, தரமற்ற உரங்களை இறக்குமதி செய்வதற்காக சீன நிறுவனத்துக்குப் பணம் செலுத்தியமை தொடர்பில், அவரைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து, மஹிந்தானந்த அளுத்கமகே கடந்த 19ஆம் திகதி கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜரானதைத் தொடர்ந்து, விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில், இன்று மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

# யாழ். போதனா வைத்தியசாலையில் ஒரே சூழில் பிறந்த ஐந்து குழந்தைகள்



யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் ஒரே சூழில் 5 குழந்தை களைத் தாயார் ஒருவர் பிரசவித் துள்ளார்.

இந்தக் குழந்தைகள் நேற்றுமுன் தினம் சனிக்கிழமை பிறந்துள்ளன.

யாழ். வட்டுக்கோட்டையைச் சேர்ந்த தம்பதியினருக்கே ஒரே சூழில் ஐந்து குழந்தைகள் பிறந்துள்ளன.

3 ஆண்குழந்தைகளையும், 2 பெண் குழந்தைகளையும் அந்தத் தாயார் பிரசவித்துள்ளார்.

தாயும் ஐந்து குழந்தைகளும் ஆரோக்கியமாக உள்ளார்கள் என்று வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

# தெற்கில் இன்றும் துப்பாக்கிச் சூடு!



கொழும்பு – காலி பிரதான வீதியில் ரன்தொம்பே பிரதேசத்தில் உள்ள உணவகம் ஒன்றுக்கு முன்பாக துப் பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது என்று அம்பலாங்கொடை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இன்று திங்கட்கிழமை அதிகாலை 1.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

ரன்தொம்பே பிரதேசத்தில் உள்ள உணவகத்துக்கு முன்பாகச் சென்ற இனந்தெரியாத நபர்கள் சிலர் வானத்தை நோக்கித் துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

இதன்போது துப்பாக்கிதாரிகள், உணவக உரிமையாளரைத் தீவிரமாகக் கண்காணித்துள்ளனர் என்றும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அம்பலாங்கொடை பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.



# மட்டு. ஜெயந்திபுரத்தில் வீட்டிலிருந்து காயங்களுடன் ஆணின் சடலம் மீட்பு!

**(கனகராசா சரவணன்)**

மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஜெயந்திபுரம் பிரதேசத்தில் வீடு ஒன்றில் தனிமை யில் வசித்து வந்த ஆண் ஒருவர் காயங்களுடன் சடலமாக இன்று மீட் கப்பட்டுள்ளார்.

ஜெயந்திபுரம், குமாரத்தன் கோயில் வீதியைச் சேர்ந்த 62 வயதுடைய 4 பிள்ளைகளின் தந்தையான ரவி என அழைக்கப்படும் அண்ணாமலை ரவீந் திரன் என்பவரே சடலமாக மீட்கப் பட்டுள்ளார்.

வீட்டில் தனிமையில் வாழ்ந்து வந்த இந்த நபர், மரக்கறி வியாபாரத்தில் ஈடுபட்டு வந்துள்ளார்.

இவர் இன்று காலை வீட்டின் முன் பகுதி வாசலில் வீழ்ந்த நிலையில் காயங்களுடன் சடலமாகக் காணப் பட்டுள்ளார்.

இதனையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸார், வீட்டின் வெளிக் கதவை உடைத்து உள்நுழைந்து சடலத்தை மீட்டனர்.

பின்னர் அவர்கள், தடவியல் பிரிவுப் பொலிஸாரை வரவழைத்து சடலத்தைப் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்துவ தற்கு நீதிமன்ற அனுமதியைப் பெற நடவடிக்கை எடுத்தனர்.

இது தொடர்பான மேலதிக விசா ரணைகளை மட்டக்களப்பு தலைமை யகப் பொலிஸார் மேற்கொண்டு வரு கின்றனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## இந்தியப் பாய்ச்சல்

நமது அண்டை நாடான இந்தியா பொருளாதாரத்தில் ஈட்டி வரும் முன்னேற்றம் குறித்து கனகாத்திரமான செய்திகள் வெளியாகி இருக்கின்றன.

இந்திய பிரதமர் நரேந்திர மோடி பதவியேற்ற பின்னர் இந்திய பொருளாதாரம் பெரும் வீச்சுடன் பாய்ச்சல் கண்டிருக்கின்றது என்பதை இப்போதைய புள்ளி விவரங்கள் உறுதிப்படுத்துகின்றன.

நரேந்திர மோடி இந்தியப் பிரதமராகப் பதவியேற்ற 2014 இல் உலகின் பெரும் பொருளாதார நாடுகள் பட்டியலில் பத்தாவது இடத்தில் இருந்த இந்தியா, தற்போது நான்காவது இடத்துக்கு முன்னேறி சாதனை படைத்துள்ளது. இந்தியாவின் பொருளாதாரம், 4 டிரில்லியன் டொலரை - அதாவது, இந்தியப் பணத்தில் 356 லட்சம் கோடி ரூபாவை - தாண்டியுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

உலகின் பெரும் பொருளாதார நாடுகளை, அதன் ஜி.டி.பி. எனப்படும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அடிப்படையில், சர்வதேச நாணய நிதியம் தரவரிசைப்படுத்தி பட்டியலை வெளியிட்டு வருகிறது.

கடந்த, 2014 இல் இந்த பட்டியலில் இந்தியா பத்தாவது இடத்தில் இருந்தது. கடந்த, 2022 இல் ஐந்தாவது இடத்துக்கு முன்னேறியது. கடந்த மாதம் வெளியிடப்பட்ட, சர்வதேச நாணய நிதியத்தின், 2025 ஆம் ஆண்டுக்கான உலக பொருளாதார கண்ணோட்ட அறிக்கையில், இந்த ஆண்டில் இந்தியா, நான்காவது பெரிய பொருளாதாரமாக மாறும் என்று கூறப்பட்டிருந்தது.

இந்நிலையில், டில்லியில் பிரதமர் நரேந்திர மோடி, மாநில முதல்வர்கள் பங்கேற்ற நிடி ஆயோக் அமைப்பின், பத்தாவது ஆண்டு கூட்டம் நேற்று முன்தினம் நடந்தது.

இந்த கூட்டம் தொடர்பாக, டில்லியில் நேற்று பேசிய, நிடி ஆயோக் தலைமை செயல் அதிகாரி பி.வி. ஆர்.சுப்பிரமணியம் உலகின் நான்காவது பெரிய பொருளாதார நாடாக இந்தியா விளங்குகிறது, சர்வதேச நாணய நிதியத்தின் தற்போதைய புள்ளி விவரங்களில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது என அறிவித்தார்.

அமெரிக்கா, சீனா, ஜெர்மனிக்கு அடுத்த நிலையில் இந்தியா உள்ளது. இதுவரை நான்காவது இடத்தில் இருந்த ஜப்பானை முந்தி இந்த நிலையை இந்தியா எட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தற்போதுள்ள இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி நிலை தொடர்ந்தால், அடுத்த மூன்று ஆண்டுக்குள் ஜெர்மனியை முந்தி, மூன்றாவது இடத்துக்கு இந்தியா முன்னேறுவதற்கு வாய்ப்புப் பிரகாசமாக உள்ளது என்றும் பொருளாதார நிபுணர்கள் கூறுகின்றனர்.

இந்திய தேசிய புள்ளியியல் அலுவலகத்தின் புள்ளி விவரங்களின்படி, 2024 - 25 ஆம் நிதியாண்டின் முதல் காலாண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 6.5 சதவீதமாக இருந்தது. இரண்டாவது காலாண்டில் அது 5.8 சதவீதமாக சரிந்த போதும், மூன்றாவது காலாண்டில் 6.2 சதவீதமாக உயர்ந்தது. 2025 - 26ம் நிதியாண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 6.2 சதவீதமாக இருக்கும் என கூறப்பட்டுள்ளது. இது முந்தைய கணிப்பான, 6.5 சதவீதத்தைவிட சற்று குறைவாகும். உலகளாவிய புவிஅரசியல் மற்றும் பொருளாதார காரணங்கள், வர்த்தகப் போட்டிகள் இந்தப் பின்னடைவுக்குக் காரணம் என்று கூறப்படுகின்றது.

இத்தகைய பின்னடைவுகளுக்கு மத்தியிலும் இந்தியா பொருளாதார வல்லரசாக எழுச்சி பெற்று வருகின்றது என்பது இந்தப் பிராந்தியத்தின் பெருமைதான்...!




# 'கொமிஷன்'களுக்குள் சிக்கியுள்ள ஆனையிறவு உப்பளத்தின் அவலம்...?

**மு.தமிழ்ச்செல்வன்**

ஆனையிறவு 1760 ஆம் ஆண்டு போர்த்துக்கீசர் காலம் தொட்டு இன்று வரை பேசப்படுகின்ற ஒரு பெயரா கவே இருந்து வருகிறது ஆனையிறவு. போர்த்துக் கீசர், பிரித்தானியர், இலங்கை படையினர், விடுதலைப் புலிகள் என இராணுவ கேந்திர நிலையங்களாக பேசப்பட்டு வந்த பெயருக்குள் 1935 ஆம் ஆண்டு தொடக்கம் ஆனையிறவு உப்பளமும் இணைந்து கொண்டது. ஆனையிறவு உப்பளம் இலங்கையில் பிரசித்தி பெற்ற உப்பளமாகும். இங்கு உற்பத்தி செய்யப்படுகின்ற உப்புக்கு இலங்கை சந்தைகளில் நல்ல கேள்வியுண்டு. ஆனால் இந்த உப்பளம் நாட்டில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக பல வருடங்களாக செயலற்று இருந்தது.

இலங்கையின் வடக்கில் கிளிநொச்சி மாவட்டத்தில் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் ஏ-9 பிரதான வீதிளை அண்டியதாக இந்த உப்பளம் அமைந்துள்ளது. 1935 ஆம் ஆண்டு தொடக்கம் 1966 வரை அரச உப்புத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் இயங்கியது. பின்னர் 1966 தொடக்கம் 1991 வரை இலங்கை தேசிய உப்புக் கூட்டுத்தாபனத்தின் கீழும், தொடர்ந்து 1991 தொடக்கம் 1997 வரை லங்கா சோல்ட் பிறைவேற் லிமிடென் கம் பனியாலும், அதன் பின்னர் 1997 தொடக்கம் 2001 வரை மாந்தை சோல்ட் லிமிடெட் நிறுவனத்தின் கீழும் இயங்கிய ஆனையிறவு உப்பளம் தற்போது நஷனல் சோல்ட் லிமிடெட் நிறுவனத்தின் கீழ் இயங்கி வருகிறது.

ஆனையிறவு உப்பளத்தில் ஆனையிறவு மற்றும் குறிஞ்சாதீவு என இரண்டு உப்பளங்கள் காணப்படு கின்றன். ஆனையிறவில் 2242 ஏக்கர் பரப்பளவும் குறிஞ்சாதீவில் 1515 ஏக்கர் பரப்பளவும் உண்டு. இதில் ஆனையிறவில் உள்ள 2242 ஏக்கர் பரப்பளவு உப் பளத்தில் தற்போது 700 ஏக்கர் மட்டுமே பயன்பாட் டில் கொண்டுவரப்பட்டுள்ளன. இதிலும் 600 ஏக்கர் பரப்பளவில்தான் உப்பு உற்பத்தி மேற்கொள்ளப்படு கிறது.

குறிஞ்சாதீவில் உள்ள 1515 ஏக்கரில் இதுவரை புனர மைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை. ஆனை யிறவு உப்பளத்தில் 2014 பணிகள் ஆரம்பிக்கப்பட்டு 2016 உப்பு எடுக்க தொடங்கினர். ஆனையிறவு உப் பளத்தில் உள்ள 700 ஏக்கர் பரப்பளவை வலயம் ஒன்று வலயம் இரண்டு என 350 ஏக்கர்களாக பிரித்து உப்பு உற்பத்தி பணிகள் இடம்பெறுகிறது. 2018 ஆம் ஆண்டு 50 பாத்திகளும், 4 ஆழ் தொட்டிகளும் முழுமையா கச் செயற்பாட்டுக்கு வந்திருக்கிறது. 2024 மேலும் 70 பாத்திகளும், 3 ஆழ் தொட்டிகளும் பயன்பாட்டுக்குக் கொண்டு வருவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இருந்தும் இவை இன்றும் பூரணமான பயன்பாட்டுக்கு வரவில்லை. 10 ஏக்கர் காச்சல் நிலத்துக்கு ஒரு ஏக்கர் விளைச்சல் நிலம் என்ற அளவில் உப்பு உற்பத்தி மேற் கொள்ளப்பட்டு வருகிறது. இதன் படி ஆனையிறவில் உள்ள 700 ஏக்ககரில் 70 ஏக்கர் விளைச்சல் நிலமாக காணப்படுகிறது.

ஒரு ஏக்கர் விளைச்சல் நிலத்தில் வருடமொன்று சுமார் 400 மெற்றிக்தொன் உப்பு உற்பத்தி செய்யப் படும் அந்த வகையில் 70 எக்கர் விளைச்சல் நிலத் துக்கும் வருடமொன்றுக்கு சுமார் 28000 மெற்றிக் தொன் உப்பு உற்பத்தி செய்யப்படும். இது வினைத் திற னாக முன்னெடுக்கபடும் பணிகளில் தங்கியிருக்கிறது.

இதனை விட குஞ்சாதீவு உப்பளம் புனரமைப்புச் செய்யப்படும் போது அங்கும் சுமார் 16 ஆயிரம் மெற்றிக் தொன் உப்பு உற்பத்தி செய்யப்படும் எனவும் தெரிவிக் கப்படுகிறது. இந்த உப்பளத்தை புனரமைப்புச் செய்வதற்கு சுமார் 350 மில்லியன் ரூபா நிதி தேவைப்படுகிறது என் றும் தெரிவிக்கப்படுகிறது. இந்த உப்பளமும் பயன்பாட் டுக்கு வருகின்ற போது இங்கும் ஆயிரக்கணக்கானவர் கள் தொழில் வாய்ப்பைப் பெறுவார்கள்.

ஆனையிறவு மற்றும் குறிஞ்சாதீவு உப்பளங்கள் முழுமையாக மீளவும் இயங்க ஆரம்பித்தால் சுமார் 4000 வரையானவர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பு களைப் பெற்றுக்கொள்ள முடியும். குறிப்பாக பெண்கள், பெண் தலைமைத்துவ குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் தொழில் வாய்ப்பை பெற்றுக் கொள்வார்கள். இதனை தவிர ஏராளமான மறைமுக தொழில் வாய்ப்புகள் கிடைப்ப தோடு, சந்தைப்படுத்தல் மூலம் அதிக வருமானத்தை யும் பெற்றுக் கொள்ள முடியும். குறிப்பாக வடக்கு மாகா ணத்தின் மிக முக்கியமான பொருளாதாரத்துக்குப் பங் களிப்புச் செய்யும் முக்கிய தொழில்துறையாக காணப் படும்.

இதனை தவிர உள்ளூர் கடற்றொழிலாளர்கள் தங்களது கருவாட்டு உற்பத்திக்கான உப்பை பெற்றுக்கொள்ளவும் முடியும்.

முக்கியமாக முன்னர் போன்று ஆனையிறவு உப்பளத் தில் இருந்து பெறப்படுகின்ற முடிவுப் பொருள்களை கொண்டு பரந்தன் இரசாயன தொழிற்சாலையினை மீளவும் ஆரம்பிக்க முடியும். இதன் மூலம் காஸ்டிக் சோடா, திரவ சோடா, ஹைட்ரோகுளோரிக் அமிலம் போன்றவற்றை உற்பத்தி செய்ய முடியும். தற்போது இலங்கை இவற்றை இறக்குமதி செய்து வருகிறது.

ஆனையிறவு உப்பளத்தில் நிரந்த ஊழியர்கள், தற்காலி ஊழியர்கள், பருவகால ஊழியர்கள், ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்கள் என கடந்த காலங்களில் பணியாற்றுள்ளனர். ஆனால் தற்போது இவர்களில் நிரந்தர பணியாளர்கள் 24 பேரும், பருவகால பணி யாளர்கள் 200 பேரும் பணியாற்றுகின்றனர். இந்த பருவ கால பணியாளர்களுக்கு தினக் கூலியாக 2150 ரூபா வழங்கப்படுகின்ற போதும் அதில் ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி உள்ளிட்ட சிலகொடுப் பனவுகள் 2150 ரூபாவில் கழிக்கப்பட்டே வழங்கப்படு கிறது. இதிலும் மாதம் முழுவதும் தொழிலாளர்களுக்கு தொழில் வழங்குவதில்லை.

தொடர்ச்சி ▼

# ‘கொமிஷன்’களுக்குள் சிக்கியுள்ள ஆனையிறவு உப்பளத்தின் அவலம்...?

தொடர்ச்சி ▲

கடந்த 14.05.2025 அன்று தொடக்கம் ஆனையிறவு உப்பளத் தொழிலாளிகள் பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து தொடர் கவனவீர்ப்பு போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர். ஆதாவது

1. திட்டமிட்ட ரீதியிலும் முகாமைத்துவக் குறைபாட்டாலும் உப்பு உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்படுத்தப்படுகிறது.

2. புதிதாக அமைக்கப்பட்டுள்ள உப்பு சுத்திகரிப்பு, உப்பு அரைத்தல் மற்றும் பொதியிடல் இயந்திரம் பழுதடைந்துவிட்டது எனத் தெரிவித்து இடை நிறுத்தப்பட்டுள்ளது.

3. அனுபவமும் தகுதியுமற்ற உத்தியோகத்தர்களின் நியமனம்.

4. உற்பத்தி செய்யப்பட்ட உப்பை உரிய காலத்தில் சேகரிப்புச் செய்யாமல் விட்டதன் மூலம் உப்பு கரைந்து போனமை.

5.ஆனையிறவில் பொதியிடலுக்கு உரிய இயந்திரம் வதற்கு முன்னர் பெரும்பாலும் தொழிற்சங்கங்களை பயன்படுத்தி பலவேறு போராட்டங்களை நடத்தி அதன் மூலமும் மக்கள் செல்வாக்கை பெற்று அதிகாரத்துக்கு வந்திருக்கிறது.ஆனால் ஆனையிறவில் ஏழைத் தொழிலாளர்கள் நீதிக்காக போராடுகின்ற போது அவர்களைத் திரும்பியும் பார்க்காது உள்ளமை, மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

ஆனையிறவு உப்பளத்தில் உப்பு பொதியிடுவதற்காக இந்தியாவிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரம் உப்பளத்தில் பொருத்தப்பட்டு கடந்த 29.03.2025 அன்று கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை, அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்தி, மற்றும் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் ஆகியோர் கலந்துகொண்டு உத்தியோகபூர்வமாக திறந்து வைத்தனர்.

ஆனால் குறித்த இயந்திரம் 10.04.2025 அன்று இயந்திரத்தின் ஒரு உபகரணம் வெடித்ததன் காரணமாக தற்போது செயற்பாடின்றிக் காணப்படுகிறது.




உள்ளபோதும் அதில் பொதியிடாமல் பிற இடங்களுக்குக் கட்டி உப்பாகத் தொடர்ச்சியாக அனுப்பிக் கொண்டிருக்கின்றமை.

6. உப்பு அரைத்தல், பொதியிடல் பகுதி இயங்காத காரணத்தால் 40 வரையான தொழிலாளர்களுக்கு உரிய இடம் காலியாக்கப்பட்டுள்ளது.

7. நியாயமற்ற முறையில் ஒரு தொகுதி ஊழியர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கிக் கொண்டு, இன்னொரு தொகுதியினரைத் தவிர்த்தல்.

8. விரும்பியவாறு உப்புத் தொழிலாளர்களை இடைநிறுத்தம் செய்தல்.

போன்ற விடயங்களை முன்வைத்தே அந்தத் தொழிலாளர்களின் போராட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டுவருகிறது.

இந்தத் தவறுகளையும் குறைபாடுகளையும் நீதியின்மையையும் நாம் உரிய இடங்களுக்குத் தெரியப்படுத்தியிருந்தோம். ஆயினும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. முன்னேற்றங்களும் ஏற்படவில்லை. எனவேதான் தொழிலாளர்களாகிய நாம் ஜனநாயக ரீதியான எமது போராட்டத்தை நடத்தும் நிலைக்குத் தள்ளப்பட்டோம்.

அரசு இது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்து உப்பளத்தை மேம்படுத்துவதோடு தொழிலாளர்களின் பிரச்சினைகளையும் கவனத்தில் கொண்டு உரிய தீர்வைத் தர வேண்டும் என்று ஆனையிறவு உப்பளத் தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆனால் அவர்களது போராட்டம் ஆரம்பித்து நாள்கள் கடந்தும் அரச தரப்பில் இருந்து எந்த பதிலும் அவர்களுக்கு கிடைக்கவில்லை. மாறாக அவர்களது நியாயமான போராட்டத்துக்குப் புறம்பான செயற்பாடுகளே இடம்பெற்றுவருகின்றன.

தேசிய மக்கள் சக்தி அரசு அதிகாரத்துக்கு வரு

ஆதாவது பத்து நாள்களில் இந்த இயந்திரம் பழுதடைந்தமை தொழிலாளிகள் மத்தியில் பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. பொதியிடல் இயந்திரம் இயங்கிய இந்தக் காலப் பகுதியில் ஆனையிறவில் இருந்து கட்டி உப்பு வெளியிடங்களுக்குச் எடுத்துச் செல்ல முடியாதிருந்தது. ஆனால் இயந்திரம் பழுதடைந்த பின்னர் மீண்டும் வழமை போன்று பாராவூர்த்திகளில் கட்டி உப்பு வெளியே எடுத்துச் செல்லப்படுகிறது.

இந்த உப்பை தென்னிலங்கையை சேர்ந்த 15 வரையானோர் கொள்வனவு செய்கின்றனர். இந்தக் கொள்வனவாளர்களை உப்பளத்தின் உயரதிகாரியே தீர்மானித்திருக்கிறார். எனவே அந்த கொள்வனவாளர்கள் தினமும் பல மொற்றிக்தொன் உப்பை ஆனையிறவில் இருந்து கொள்வனவு செய்து செல்கின்றனர். இந்த கொள்வனவாளர்கள் மூலம் சிலருக்கு ‘கொமிசன்’ கிடைக்கிறது எனவும் அதன் காரணமாகவே ஆனையிறவில் உப்பு பொதியிடப்படுவதை அவர்கள் விரும்பிவில்லை என்றும் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

குறித்த இயந்திரத்தை இந்தியாவுக்குச் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து கொள்வனவு செய்த குழுவினர் உப்பளத்தின் உயர் பதவியில் இருக்கின்ற ஒருவரின் சகாக்கள் என சொல்லப்படுகிறது. இந்த உப்பளத்தின் தற்போதைய சிக்கலுக்கு அந்த உயரதிகாரியே பிரதான காரணம் எனவும் பலரும் குறிப்பிடுகின்றனர். இந்த இயந்திரம் ஒரு கிலோ மற்றும் 400 கிராம் பொதிகளை பொதியிடக் கூடியது. ஒரு மணித்தியாலயத்தில் 5 தொன் உப்பை பொதியிடும் திறன் கொண்டது.

இவ்வாறு அந்த இயந்திரம் உப்பை, ஆனையிறவில் பொதியிடும்போது வெளியில் உப்பை எடுத்துச் செல்வது தடுக்கப்படும். இதனால் உயரதிகாரிகள் விரும்பவில்லை. ஆனையிறவு உப்பளத்தை விரிவாக்கவும் விரும்ப

தொடர்ச்சி ▼

# ‘கொமிஷன்’களுக்குள் சிக்கியுள்ள ஆனையிறவு உப்பளத்தின் அவலம்...?

தொடர்ச்சி ▲

வில்லை என்பதே இப்போது பலரும் முணுமுணுக்கும் விடயமாகும்.

ஆனையிறவில் உற்பத்தி செய்யப்படும் உப்பு, கட்டி உப்பாக அம்பாந்தோட்டை, புத்தளம், மன்னார் உப்பளங்களுக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு பொதியிடப்பட்டு தனியார் கொள்வனவாளர்கள் அவற்றைப் பெற்றுச் செல்கின்றனர். இவர்கள் ஆனையிறவில் ஒரு கிலோ உப்பை தற்போது 67 ரூபாவுக்கு கொள்வனவு செய்து அதனை இங்கிருந்து அம்பாந்தோட்டைக்கும், புத்தளத்துக்கும் கொண்டு செல்கின்றனர் அங்கு பொதியிடுகின்றனர். பின்னர் அவற்றை அங்கிருருந்து மீளவும் வடக்கு பிரதேசம் உட்பட பல பிரதேசங்களுக்கு விற்பனை செய்கின்றனர். ஏற்றிக்கொண்டு செல்வதற்கான போக்குவரத்து செலவு, பொதியிடல் செலவு, மீளவும் கொண்டுவருவதற்கான செலவு என உப்பின் விலை அதிகரிக்கும் நிலையே உள்ளது.

ஆனையிறவு உப்பளத்தின் ஒரு பகுதியான குறிஞ்சாதீவு உப்பளத்தைத் தனியாருக்கு விற்பனை செய்வதில் உப்பள உயரதிகாரிகள் அதிக அக்கறை காட்டிவருகின்றனர். ஏற்கனவே அதனை தனியாருக்கு விற்பனை செய்யப் போவதாக அறிவித்தல் வெளியிட்ட பின்னர் வடக்கு, கிழக்கு உள்ளிட்ட பல பகுதிகளைச் சேர்ந்து எட்டு வரையான தனியார்கள் விண்ணபத்திருந்தார்கள். ஆனால் பின்னர் அந்த நடவடிக்கை கிடப்பில் போடப்பட்டு பின்னர் தனியார் கம்பனி ஒன்றுக்கு விற்பனை செய்வதற்கு முயற்சி எடுக்கப்பட்டது அந்த தனியார் கம்பனிக்குத் திட்டமுன்மொழிவை கூட உப்பளத்தின் உயரதிகாரிகள் சிலர் மேற்கொண்டதாகவும் தகவல்கள் உண்டு. ஆனால் இதனை கேள்வியுற்ற ஏற்கனவே விண்ணப்பத்திருந்த எட்டு விண்ணப்பதாரர்கள் நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்து தற்போது அந்த வழக்கும் இடம் பெற்று வருகிறது.

ஆனையிறவு மற்றும் குறிஞ்சாதீவு உப்பளங்களைப் புனரமைத்து அதனை முழுமையாகப் பயன்பாட்டுக்குக் கொண்டு வந்தால் சுமார் மூவாயிரத்துக்கும் மேற்பட்டோர் நேரடி வேலைவாய்ப்பை பெறுவதோடு, இந்த பிரதேசத்தின் பொருளாதாரத்திலும் முன்னேற்றத்தை ஏற்படுத்தும். ஆனால் அது ‘கொமிசன்’களைத் தடுத்துவிடும்.

சில உயரதிகாரிகளுக்கு ஆனையிறவிலிருந்து எவ்வளவு உப்பு வெளியே செல்கிறே அதற்கேற்ற அளவில் ‘கொமிசன்’களும் கிடைக்கும். அதன் காரணமாகவே உப்பளம் பயன்பாட்டுக்கு வந்து 10 வருடங்களை கடந்தும் அதனை முழுமையாக வினைத்திறனாக பயன்படுத்தாது வைத்திருகின்றனர்.

கோடை காலங்களில் தொழிலாளர்களுக்கு தினமும் வேலை வழங்க கூடிய வாய்ப்புக்கள் காணப்பட்டும் அதனை வழங்காது வருகின்றனர். அதிகளவு உப்பு உற்பத்தி பொதியிடல் மேற்கொள்ள கூடிய வசதி வாய்ப்புக்கள் காணப்பட்டும் அதில் ஆர்வம் காட்டாது அசட்டையீனம் செய்வது வருகின்றனர்.

ஒரு பிரதேசத்தின் பொருளாதாரத்தில் மிகப்பெரும் முன்னேறத்தை ஏற்படுத்தக் கூடிய ஒரு உப்பளம் சிலரின் தனிப்பட்ட நலன்களுக்காக பயன்படுத்துப்படுகிறது. இதனாலேயே அந்த தொழிலாளர்கள் போராடுகின்றனர்.அதுவும் தொழிலாளர்களின் கட்சி என்று சொல்லப்படுகின்ற ஜேவிபியின் காலத்தில் ஒரு தொழிலாளர் சமூகம் போராடுகிறது. ஆனால் அவர்களது போராட்டத்தை ஆட்சியாளர்கள் கண்டுகொள்ளவில்லை.






# அதிபர், ஆசிரியர் தாக்கப்பட்டதை கண்டித்து ஆலையடிவேம்பில் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம்!

## கறுப்பு பட்டியணிந்து வீதியில் இறங்கிய ஆசிரியர்கள்

(வடிவேல் டினேஸ் )

ஆலையடிவேம்பு திருநாவுக்கரசு வித்தியாலய அதிபர் மற்றும் ஆசிரியர் கடந்த 23 ஆம் திகதி, மாணவர்கள் நலன் கருதி செயற்பட்டவேளை கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவமானது அக்கரைப்பற்று ஆலையடிவேம்பு பிரதேசத்தில் பிரதேசத்தில் பாரிய அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

இதனை தொடர்ந்து திருக்கோவில் கோட்டக் கல்வி பணிப்பாளர், அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் இணைந்து இன்று ( 26) காலை கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தனர்.

அக்கரைப்பற்று சாகாம வீதியூடாக சென்ற ஆர்ப்பாட்டகாரர்கள் அக்கரைப்பற்று பஸ் நிலையத்திற்கு முன்பாகப் பதாகைகளுடன் ஒன்று கூடி, “கட்டாயக் கல்வியை அமுல்படுத்திவிடு, கல்விப் புலத்தோருக்கு சமூகமே பாதுகாப்பு கொடு, கல்விக்குத் தடையான காடையர்களை அடக்கு, அதிபர், ஆசிரியர் பாதுகாப்பை உறுதி செய்” போன்ற வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்திய வண்ணம் கைகளில் கறுப்பு பட்டியணிந்து தமது எதிர்ப்பை வெளியிட்டனர்.

சம்பவம் தொடர்பாக அக்கரைப்பற்று பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கொத்மலை பொலிஸ் பிரிவில் லொறி ஒன்றில் சிக்கியவர் பலி!

கொத்மலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கெமில்தன் தேயிலைத் தோட்ட வீதியில் லொறி ஒன்றில் சிக்கி நபரொருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து நேற்று (25) இரவு இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் பலத்த காயமடைந்த நபர், நுவரெலியா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் உயிரிழந்த நபர் 33 வயதுடைய வெவன்டன்வத்த, தவலன்தென்ன பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சடலம் நுவரெலியா வைத்திய சாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொத்மலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.






# இன்றைய மாணவர்கள் கல்விக்கு மேலதிகமாக தலைமைத்துவப் பண்புகளை வளர்க்க வேண்டும்

## வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் வலியுறுத்து

வடக்கு மாகாணத்தை கட்டியெழுப்புவதற்கு எதிர்காலத்தில் உயர் பதவிகளில் அமரப்போகும் இன்றைய மாணவர்கள், கல்விக்கு மேலதிகமாக தங்கள் தலைமைத்துவப் பண்புகளையும் வளர்த்துக்கொள்ள வேண்டும். அப்போதுதான் இந்தச் சமூகத்துக்கு தேவையனவர்களாக நீங்கள் மாறமுடியும்.

இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் வலியுறுத்தினார்.

இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் ஏற்பாட்டில் மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வு யாழ். மாவட்டச் செயலகத்தில் மாவட்டச் செயலர் ம.பிரதீபன் தலைமையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை (25) நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜெ.ரஜீவன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார். அத்துடன் இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையின் வடக்கு, கிழக்கு சிரேஷ்ட இணைப்பாளர் பா.பிரதீபனும் பங்கேற்றிருந்தார்.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடக்கு மாகாண ஆளுநர் தனது உரையில்,



சமூகப் பாதுகாப்புச் சபைக்கு அங்கத்தவர்களை இணைத்துக் கொள்வதில் தேசிய ரீதியில் யாழ். மாவட்டமே முதலிடத்தில் இருந்து வருகின்றது. ஆரம்பத்தில் சமூக பாதுகாப்புச் சபையில் இணைவதன் பயன் தொடர்பில் பலர் அறிந்திருக்கவில்லை. ஓய்வூதியத்தைப் பெற்று அதன் அனுகூலங்கள் அனுபவிக்கத் தொடங்கிய பின்னர் அதிகளவில் இணைந்து கொண்டனர்.

முதுமைக்காலத்தில் ஓய்வூதியத்தின் அவசியம் உணரப்படும். இதனால்தான் என்னவோ அரச உத்தியோகத்தையே அதிகம் விரும்புகின்றனர். அவர்கள் இவ்வாறு அரச உத்தியோகத்தை விரும்புவதன் பின்னால் வேறு காரணமும் இருக்கின்றது. அரச வேலை கிடைத்தால் தாங்கள் 'சும்மா' இருந்து சம்பளத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என்ற எண்ணமும் இருக்கின்றது.

எந்தவொரு பிரதேசமும் அபிவிருத்தியடைய கல்வி அவசியம். கல்வியால்தான் ஒரு பிரதேசத்தை உயர்த்த முடியும். கல்வியில் சிறந்த பெறுபேற்றை பெற்றுக் கொண்டால் மாத்திரம் போதாது. அவர்களின் நடத்தையில்தான் சமூகத்தில் மதிக்கப்படுவார்கள். அவர்கள் கல்வியால் உயரும் அதேநேரம், தலைமைத்துவப்பண்பையும், ஏனையோருக்கு உதவுவதையும், அன்பு செலுத்துவதையும், மற்றையோரை மதிப்பதையும் வளர்த்துக்கொள்ள வேண்டும்.

நீங்கள் எந்தப் பிரதியுபகாரத்தையும் எதிர்பார்க்காமல் மற்றையவர்களுக்கு உதவுவதில்தான் உண்மையான சந்தோசம் இருக்கின்றது. அவ்வாறு உதவுவதால் உங்களுக்கு பல உதவிகள் உங்களுக்குத் தெரியாமலேயே கிடைக்கும். இந்தப் பண்புகளை மாணவர்களாகிய நீங்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும்.- என்றார்.

இந்ந நிகழ்வில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 138 மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். 4 மாணவர்களுக்கு தலா 50,000 ரூபாவும், 3 மாணவர்களுக்கு தலா 25,000 ரூபாவும், ஒரு மாணவனுக்கு 15,000 ரூபாவும், ஏனையோருக்கு 5,000 ரூபாவும் வழங்கப்பட்டன.









# சட்டவிரோதமாக மாடுகளைக் கடத்திய 5 பேர் காரைநகரில் பொலிஸாரால் கைது!



யாழ்ப்பாணத்தில் சட்ட விரோதமாக மாடு கடத்தலில் ஈடுபட்ட சந்தேகநபர் ஐவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அனுமதிப்பத்திரம் இன்றி ஏழு மாடுகளை வாகனம் ஒன்றில் ஏற்றிச் சென்றபோது காரைநகர் பகுதியில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கை ஊர்காவற்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி விதான பத்திரனவின் கீழ் இயங்கும் பொலிஸ் குழுவினரால் இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் அவர்களை ஊர்காவற்துறை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.







# இன்று உயர் பதவிகளில் இருக்கும் பலரிடம் தலைமைத்துவப் பண்பைக் காணவில்லை!

## வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் தெரிவிப்பு

உயர் பதவிகளில் இருக்கும் பலரிடம் இன்று தலைமைத்துவப் பண்பைக் காணவில்லை. இதனால் மக்களுக்கு அரசாங்கச் சேவைகளைப் பெற்றுக் கொள்வதில் பெரும் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இந்தப் பிரச்சினை வடக்கு மாகாணத்துக்குரியது மாத்திரமல்ல, இது ஒட்டுமொத்த நாட்டுக்கும் உரிய பிரச்சினை.

இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

யாழ். உயர் தொழில்நுட்பவியல் நிறுவகத்தின் ஏற்பாட்டில் கலாசாரப் பெருவிழா 'தலசம் – 2025' என்னும் தலைப்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை (25) யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் நடைபெற்றது.

முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட வடக்கு மாகாண ஆளுநர் தனது உரையில், கல்வியில் உயர் நிலையை அடைவதால் மாத்திரம் நாம் எல்லாவற்றையும் பெற்றுவிட முடியாது. கல்வியுடன் நாம் ஏனைய திறமைகளையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். கலை, விளையாட்டுக்களில் எங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்.

இவற்றுக்கு மேலாக தலைமைத்துவப் பண்பை நாங்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும். எங்கள் சமூகத்துக்கு இது இன்று தேவையாக இருக்கின்றது. சிறந்த தலைமைத்துவப் பண்பு உள்ளவர்களாலேயே சமூகத்தில் மிளிர முடியும்.

நீங்கள் உங்கள் கல்வியுடன் சேர்த்து உங்களை ஆளுமையுள்ளவர்களாக மாற்றிக் கொள்ள வேண்டும். கல்வியில் உயர்ந்த நிலைக்கு வருபவர்களால் சமூகத்துக்கு சேவையாற்ற முடியாது. அவர்கள் தங்கள் பண்புகளையும் அதற்கு ஏற்றவாறு வளர்த்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் அவர்களால் இந்தச் சமூகத்துக்கு உதவ முடியும்.– என்றார் .

இந்த நிகழ்வில் கௌரவ விருந்தினர்களாக இலங்கை உயர்தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் எல்.ரோட்ரிகோ, உயர் தொழில் நுட்பவியல் நிறுவக யாழ்ப்பணத்தின் பணிப்பாளர் ஜெ.பிரதீபன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

உயர்தொழில்நுட்பவியல் நிறுவகத்தால் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான விருதுகள், சான்றிதழ்களை ஆளுநர் வழங்கி வைத்தார். அத்துடன் உயர் தொழில்நுட்பவியல் நிறுவக மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன.














# வல்வெட்டித்துறையில் நடைபெற்ற 79 ஆவது இரத்ததான நிகழ்வு!

**(வடமராட்சி நிருபர்)**

வல்வெட்டித்துறை இரத்ததானச் சங்கம் ஊடாக, 79 ஆவது இரத்த தான நிகழ்வு இன்று (25) ஞாயிற்றுக் கிழமை காலை ஆரம்பமாகி நடை பெற்றது.

இதில் 39 ஆண்களும் 12 பெண் களுமாக மொத்தம் 51 பேர் குருதிக் கொடை வழங்கியிருந்தனர்.

இதற்கான அனுசரணையை "வல்வை 1975 நட்புகள்" வழங்கி இருந்தனர்.

இந்த இரத்ததான நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கமும் கலந்துகொண் டார்.











# வெளிநாடு அனுப்புவதாகத் தெரிவித்து 27 லட்சத்து 80 ஆயிரம் ரூபா மோசடி!

## சந்தேகநபர் பொலிஸாரால் கைது!!



யாழ். வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு பகுதியில் குடும்ப பெண்ணிடம் வெளிநாடு அனுப்புவதாக கூறி 27 லட்சத்தி 80 ஆயிரம் ரூபாவை மோசடி செய்த பெண் ஒருவரை பொலிஸார் நள்ளிரவில் கைது செய்துள்ளனர்.

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடை சேர்ந்த ரமேஷ் பிரேமா என்னும் குடும்ப பெண்ணிடம் அவரது கணவரை கனடா அனுப்புவதாகக் கூறி பெண் ஒருவர் 27 லட்சத்தி 80 ஆயிரம் ரூபாவை 2023 ஆம் ஆண்டு பெற்றுள்ளார்.

இந்த நிலையில் அவரது தொடர்பு துண்டிக்கப்பட்டது. இதனையடுத்துத் தாம் மோசடி செய்யப்பட்டதை உணர்ந்த குடும்பப் பெண், காசு பரிமாற்றம் செய்யப்பட்டமைக்கான அனைத்து ஆதாரங்களுடன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதன் பிரகாரம் 2024 ஆம் ஆண்டு சந்தேக நபருக்கு கிளிநொச்சி நீதிமன்றம் பயணத்தடை விதித்து பிடியாணை பிறப்பித்திருந்தது.

இந்த நிலையில் அந்தப் பெண் சந்தேக நபர் மருதங்கேணி பொலிஸாரின் உதவியுடன் செம்பியன்பற்றில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவரிடம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். இந்த நிலையில் குறித்த நபர் அதே பகுதியில் பலரிடம் மோசடி செய்துள்ளார் என்று தெரியவந்துள்ளது.

சந்தேக நபரை கிளிநொச்சி நீதிமன்றில் முன்னிலைப்படுத்த மருதங்கேணி பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

அதேவேளை தன்னுடைய பெருந்தொகையான பணத்தை மோசடி செய்த பெண்ணிடம் இருந்து தனக்குரிய பணத்தை மீள பெற்றுத் தருமாறு பாதிக்கப்பட்ட குடும்ப பெண் பொலிஸாரிடம் கேட்டுள்ளார்.





# சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் மருத்துவ முகாமும் மர நடுகையும்

யாழ்ப்பாணம் மருத்துவ சங்கத்தின் ஏற்பாட்டில் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் மருத்துவ முகாமும் மர நடுகை வேலைத்திட்டமும் அண்மையில் முன்னெடுக்கப்பட்டன.

கல்லூரி பழைய மாணவரும் வைத்தியருமான சசிகரனின் ஒழுங்கமைப்பில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

யாழ்ப்பாண மருத்துவ சங்கத்தின் தலைவர், செயலாளர் மற்றும் உறுப்பினர்களின் பங்கேற்புடன் நடைபெற்ற நிகழ்வில் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு தொற்றா நோய்கள், வீதி விபத்து தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

தொற்றா நோய்கள் தொடர்பான கருத்தமர்வை வைத்தியர் சிவரஞ்சனியும், வீதி விபத்துகள் தொடர்பான கருத்தமர்வை வைத்தியர் சயந்தனும் மேற்கொண்டனர்.











# யாழ். மாவட்ட ஊராட்சி முற்ற கலந்துரையாடல் செயலகத்தில்

(த.சுபேசன்)

2025 ஆம் ஆண்டுக்கான முதலாம் காலாண்டுக்கு உரிய, யாழ். மாவட்ட ஊராட்சி முற்றக் கலந்துரையாடல் யாழ்ப்பாண மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் கிறிசலிஸ் நிறுவனம் மற்றும் யாழ். மாவட்ட குடிசார் அமைப்புக்களின் சம்மேளனம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் யாழ். மாவட்ட செயலாளர் ம.பிரதீபன் மற்றும் வட மாகாண மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் பொ.வாகீசன் ஆகியோரின் இணைத் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது கிராம மற்றும் பிரதேச மட்டங்களில் இனங்காணப்பட்டு இதுவரை தீர்க்கப்படாத சுகாதாரப் பிரச்சினை, வீட்டுத்திட்ட நிதி விடுவிப்பு, கட்டாக்காலிகள் பிரச்சினை, குரங்குகளால் ஏற்படும் பொருளாதார நெருக்கடி, கட்டட அனுமதிகளின் போதான தாமதம்,விசேட தேவை உடையோருக்கான வாக்களிப்பு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக முன்மொழியப்பட்டு அவை தொடர்பாக விவாதிக்கப்பட்டு பெரும்பாலான பிரச்சினைகளின் தீர்வுகளுக்குரிய ஆலோசனை மற்றும் வழிமுறைகளும் வழங்கப்பட்டிருந்தன.

நிகழ்வில் விசேடமாக பால்நிலை வன்முறைகள் தொடர்பான வடமாகாண சேவை வழங்குனர்களினுடைய தகவல் திரட்டு வெளியிட்டு வைக்கப்பட்டது.

தகவல் திரட்டை கிறிசலிஸ் நிறுவன திட்ட மற்றும் பிராந்திய முகாமையாளர் ம.பிரபாகரன், மாவட்ட அரச அதிபர் மற்றும் மாகாண மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் ஆகியோருக்கு வழங்கி வெளியிட்டு வைத்தார்.

நிகழ்வில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பிரதேச செயலர்கள், சாவகச்சேரி பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் எஸ்.சுதோகுமார், யாழ்ப்பாண மாவட்ட குடிசார் அமைப்புக்களின் சம்மேளன பிரதிநிதிகள், கிறிசலிஸ் நிறுவன உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.



# வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் பெண்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது!

கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து இரண்டு பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று (25) விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கம்பளை மற்றும் ஹ்னுமுல்ல ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 30 மற்றும் 47 வயதுடைய இரண்டு பெண்களே இதன்போது கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களான இரண்டு பெண்களும் நேற்று அதிகாலை வெளிநாட்டிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

இதன்போது, விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் இரண்டு பெண்களும் கொண்டு வந்த பயணப் பொதிகளில் இருந்து 58 ஆயிரம் வெளிநாட்டு சிகரெட்டுகள் அடங்கிய 290 சிகரெட்டு காட்டுன்கள் மீட்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை விமான நிலைய பொலிஸ் போதைப் பொருள் தடுப்பு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.



# இலங்கையின் கராத்தே ஆரம்பிக்கப்பட்டு 50 ஆண்டுகள் நிறைவையிட்டு நிகழ்வு

இலங்கையின் கராத்தே தற்காப்பு கலை ஆரம்பிக்கப்பட்டு 50 ஆண்டு நிறைவை முன்னிட்டு முல்லைத் தீவு மாவட்ட கராத்தே தோ சம்மேள னத்தின் ஏற்பாட்டில் நிகழ்வு ஒன்று இடம்பெற்றுள்ளது.

குறித்த நிகழ்வானது புதுக்குடி யிருப்பு மத்திய கல்லூரி மைதானத் தில் நேற்று (25) இடம்பெற்றுள்ளது.

தற்காப்புக் கலையை இளைஞர் கள் மத்தியில் ஊக்குவிக்க வேண்டும் என்ற நோக்கில் இலங்கை கராத்தே தோ கூட்டமைப்பின் கீழ் முல்லைத் தீவு மாவட்ட கராத்தே தோ சம்மேள னத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ் வில் முல்லைத்தீவு மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட 09 தற்காப்பு கலை பயிற்சி நிலையங்களை சேர்ந்த 400 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டு தற்காப்பு கலையின் செயல் விளக்கத் தைச் செய்து காண்பித்திருந்தனர்.

இந்த நிகழ்வில் பொதுமக்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.





# மட்டக்களப்பில் சைக்கிள் திருடிய ஒருவர் கைது; இரு சைக்கிள்கள் மீட்பு!

**(கனகராசா சரவணன்)**

மட்டக்களப்பு நகரில் இரு சைக்கிள் களை திருடிய புதூரைச் சேர்ந்த ஒருவரை நேற்று ஞாயிற்றுக்கிழமை (25) கைது செய்ததுடன் திருடப்பட்ட சைக்கிள்களை மீட்டுள்ளனர் என்று மட்டக்களப்பு தலைமையக பொலி ஸார் தெரிவித்தனர்.

நகரில் உள்ள தனியார் வங்கி ஒன் றுக்குச் சைக்கிளில் சென்று அதனை அங்கு நிறுத்திவிட்டு வங்கிக்குள் சென்று வெளியே வந்து பார்த்த போது அங்கு நிறுத்தி வைத்த சைக்கிள் காணாமல் போயிருந்தது.

இதனை அறிந்து கொண்ட சைக் கிள் உரிமையாளர் அந்தப் பகுதியில்



தேடிய போது சைக்கிள் திருடியவர் சிசிரி கமராவில் பதிவாகியுள்ளதை தொடர்ந்து சைக்கிளை திருடியவரை அடையாம் கண்டு கொண்டனர்.

இதனை தொடர்ந்து புதூரைச் சேர்ந்த அந்த நபரைக் கைது செய்து அவரிடம் மேற்கொண்ட விசாணையின் போது திருடிய ஒரு சைக்கிளை 18 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்தார் என்றும் அடுத்த சைக்கிளை 5 ஆயிரம் ரூபா வுக்கு ஈட்டுகடை ஒன்றில் ஈடு வைத் துள்ளார் என்றும் தெரியவந்துள் ளது.

இதனையடுத்து இரு சைக்கிள் களையும் மீட்டுள்ளதுடன் கைது செய் யப்பட்டவரை நீதிமன்றில் ஆஜர் படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

# நரேந்திர மோடி தலைமையில் இடம்பெற்ற தேசிய ஜனநாயக கூட்டணி முதல்வர்கள் கூட்டம்

பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் தேசிய ஜனநாயக கூட்டணி முதல்வர்கள் கூட்டம் டில்லியில் நேற்று நடைபெற்றது. இதில் ஒபரேஷன் சிந்தூர், சாதிவாரி கணக்கெடுப்பு, மத்திய அரசின் ஓராண்டு ஆட்சி குறித்து விரிவான ஆலோசனை நடத்தப்பட்டது.

மத்தியில் பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி நடத்தி வருகிறது. குஜராத், உத்தர பிரதேசம், மத்திய பிரதேசம், ராஜஸ்தான், சத்தீஸ்கர், ஒடிசா, கோவா, டில்லி, ஹரியானா, அசாம், திரிபுரா உள்ளிட்ட மாநிலங்களில் பா.ஜ.க. ஆட்சி நடைபெறுகிறது. மகாராஷ்டிரா, பிஹார், ஆந்திரா உள்ளிட்ட மாநிலங்களில் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி நடத்தி வருகிறது.

இந்த சூழலில் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் தேசிய ஜனநாயக கூட்டணி முதல்வர்கள், துணை முதல்வர்களின் கூட்டம் டில்லியில் நேற்று நடைபெற்றது. இதில் 20 முதல்வர்கள், 18 துணை முதல்வர்கள் பங்கேற்றனர்.

மத்திய அமைச்சரும் பா.ஜ.க. தேசிய தலைவருமான ஜே.பி.நட்டா, மத்திய அமைச்சர்கள் அமித் ஷா, ராஜ்நாத் சிங் மற்றும் உத்தர பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத், பிஹார் முதல்வர் நிதிஷ் குமார், மகாராஷ்டிர முதல்வர் தேவேந்திர பட்னாவிஸ், குஜராத் முதல்வர் பூபேந்திர படேல், அசாம் முதல்வர் ஹிமந்த பிஸ்வா சர்மா, ஆந்திர துணை முதல்வர் பவன் கல்யாண், மகாராஷ்டிர துணை முதல்வர்கள் ஏக்நாத் ஷிண்டே, அஜித் பவார் உள்ளிட்டோர் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

ஒபரேஷன் சிந்தூர், அதன்பிறகு ஏற்பட்ட நிகழ்வுகள் குறித்து தேசிய




ஜனநாயக கூட்டணி முதல்வர்கள் கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டது. ஒபரேஷன் சிந்தூரை வெற்றி பெறச் செய்த முப்படைகளுக்கும் கூட்டத்தில் மரியாதை செலுத்தப்பட்டது. பிரதமர் நரேந்திர மோடியின் சீரிய தலைமைக்கு கூட்டத்தில் பாராட்டு தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பான தீர்மானத்தை மகாராஷ்டிர துணை முதல்வர் ஏக்நாத் ஷிண்டே கூட்டத்தில் முன்மொழிந்தார். இந்த தீர்மானம் ஒருமனதாக ஏற்கப்பட்டது.

நாடு முழுவதும் விரைவில் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட உள்ளது. அப்போது சாதிவாரி கணக்கெடுப்பும் நடத்தப்படும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது. இது தொடர்பாக கூட்டத்தில் விரிவாக ஆலோசிக்கப்பட்டது. இதுதொடர்பான தீர்மானம் கூட்டத்தில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசு 3 ஆவது முறையாக கடந்த 2024 ஆம் ஆண்டு ஜூன் 9 ஆம் திகதி பதவியேற்றது. புதிய அரசு பதவியேற்று ஓராண்டு நிறைவடைந்து இருக்கிறது. கடந்த ஓராண்டில் மேற்கொள்ளப்பட்ட வளர்ச்சி திட்டங்கள் குறித்து கூட்டத்தில் முக்கிய ஆலோசனை நடத்தப்பட்டது. மத்திய அரசின் திட்டங்களை நாடு முழுவதும் கொண்டு சேர்க்க தேசிய ஜனநாயக கூட்டணி முதல்வர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது.

எதிர்வரும் ஜூன் 21ஆம் திகதி சர்வதேச யோகா தினம் கொண்டாடப்பட உள்ளது. அன்றைய தினம் ஆந்திராவின் விசாகப்பட்டினத்தில் நடைபெறும் யோகா தின விழாவில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்கிறார். இதற்காக பிரம்மாண்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இதேபோல தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி நடத்தும் அனைத்து மாநிலங்களிலும் யோகா தின விழாவை பிரம்மாண்டமாக நடத்த கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது.

பா.ஜ.க. மற்றும் கூட்டணி கட்சிகளை சேர்ந்த முதல்வர்கள் அவரவர் மாநிலங்களில் மேற்கொள்ளப்படும் பல்வேறு நலத்திட்டங்கள் குறித்து கூட்டத்தில் எடுத்துரைத்தனர். இதில் சிறந்த திட்டங்களை அனைத்து மாநிலங்களும் பின்பற்ற அறிவுறுத்தப்பட்டது.

கூட்டத்துக்கு பிரகு மத்திய அமைச்சரும் பா.ஜ.க. தேசிய தலைவருமான ஜே.பி. நட்டா செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

"பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் முப்படைகளும் இணைந்து ஒபரேஷன் சிந்தூரை வெற்றிகரமாக நடத்தின. இதற்காக பிரதமர் மோடிக்கு கூட்டத்தில் பாராட்டு தெரிவிக்கப்பட்டது. முப்படைகளின் வீர, தீரத்துக்கு மரியாதை செலுத்தும் வகையில் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. நாங்கள் சாதி அரசியலை ஊக்குவிக்கவில்லை. எனினும் நலிவுற்ற மக்களை மேம்படுத்துவதற்காக சாதிவாரி கணக்கெடுப்பை நடத்த முடிவு செய்துள்ளோம். இதுதொடர்பாகவும் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது." என்றார்.

# டில்லியில் கொட்டித்தீர்த்த கனமழை; 200 விமானங்களின் சேவை பாதிப்பு

இந்திய தலைநகர் டில்லியில் பலத்த காற்றுடன் கனமழை விடிய விடிய கொட்டி தீர்த்தது. இதனால் டில்லியின் பல்வேறு பகுதிகளில் வீதிகளில் மழைநீர் தேங்கி போக்குவரத்து பெரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளது. வானிலை காரணமாக விமான சேவையும் பாதிக்கப்பட்டது.

முன்னதாக, டில்லி மற்றும் அதையொட்டிய பகுதிகளுக்கு மழை குறித்த சிவப்பு எச்சரிக்கை கொடுத்திருந்தது இந்திய வானிலை ஆய்வு மையம். இந்நிலையில், டில்லி மட்டுமல்லாது ஹரியானாவின் சில பகுதியிலும் மழை பதிவானது.

டில்லியில் சனிக்கிழமை இரவு முதல் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை வரை விடிய விடிய பெய்த மழை காரணமாக வீதிகளில் மரங்கள் மற்றும் மின்கம்பங்கள்



சாய்ந்தன. இரவு 11.30 முதல் அதிகாலை 5.30 மணி வரையிலான ஆறு மணி நேரத்தில் சுமார் 81.2 மில்லிமீற்றர் மழை பொழிந்ததாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. சஃப்தர்ஜங் பகுதியில் மணிக்கு 82 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசியுள்ளது.

இந்தியாவின் மிகப்பெரிய விமான நிலையமாக உள்ள டில்லியின் இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்தில் மழை மற்றும் மோசமான வானிலை காரணமாக விமான சேவை கடுமையாக பாதிக்கப்பட்டது. இதனை விமான நிறுவனங்களும் சமூக வலைதள பதிவு மூலம் உறுதி செய்தன. சனிக்கிழமை இரவு 11.30 முதல் ஞாயிற்றுக்கிழமை காலை 4 மணி வரையில் 200 விமானங்களின் சேவை பாதிக்கப்பட்டது. 49 விமானங்கள் திருப்பி விடப்பட்டன என தெரிவிக்கப்படுகிறது.

மழை காரணமாக பல்வேறு விமான நிறுவனங்களின் பயண சேவை பெரிய அளவில் மாற்றம் கண்டுள்ளது. அதனால் பயணிகள் தங்கள் விமானத்தின் புறப்பாடு நேரத்தை அறிந்து விமான நிலையம் வருமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.





# ஒரே இரவில் 367 ட்ரோன்களை உக்ரைன் மீது ஏவியது ரஷ்யா

## 13 பேர் உயிரிழப்பு

ஒரே இரவில் 367 ட்ரோன்களை ஏவி உக்ரைன் முழுவதும் மிகப்பெரிய வான்வழித்தாக்குதலை ரஷ்யா நடத்தியுள்ளது. தற்போது நடைபெற்று வரும் உக்ரைன் ரஷ்யா போரில் நடந்திருக்கும் மிகப்பெரிய வான்வழித் தாக்குதல் இதுவாகும்.

ரஷ்யாவின் வான்வழித்தாக்குதலில் 3 குழந்தைகள் உட்பட 13 பேர் உயிரிழந்துள்ளனர், பலர் காயமடைந்துள்ளனர். கீவ், கார்கிவ், மைக்கோலைவ், டெர்னோபில் மற்றும் கிமெல்னிட்ஸ்கி என பரவலான அளவில் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. இதனிடையே உக்ரைன் விமானப்படை 267 ட்ரோன்கள் மற்றும் 45 ஏவுகணைகளை சுட்டுவீழ்த்தியதாக தெரிவித்துள்ளது. என்றாலும், உக்ரைனுக்கு பெரிய அளவில் சேதம் ஏற்பட்டுள்ளது. அடுக்குமாடி குடியிருப்புகள் உள்பட உள்கட்டமைப்புகள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளன.

கீவ்வில் 11 பேர் காயமடைந்துள்ளனர், கிமெல்னிட்ஸ்கி-ல் நான்கு பேர் உயிரிழந்ததாக கூறப்படுகிறது. கிவ்-ஐ குறிவைத்து வெள்ளிக்கிழமை நடந்த ட்ரோன்கள், ஏவுகணைகள் தாக்குதல்களைத் தொடர்ந்து இந்த வான்வெளித்தாக்குதல் நடந்துள்ளது.

தெற்கு உக்ரைனின் மைக்கோலைவ் மீது ரஷ்யா நடத்திய ட்ரோன் தாக்குதலில் 77 வயது முதியவர் ஒரு வர் கொல்லப்பட்டார். ஐந்து பேர் காயமடைந்தனர் என்று பிராந்திய ஆளுநர் தெரிவித்துள்ளார். இந்தத் தாக்குதலில் ஒரு அப்பார்ட்மெண்ட் தாக்கப்பட்டு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில், டொனால்ட் ட்ரம்ப் தலைமையின் கீழான அமெரிக்காவின் மௌனத்தை உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி விமர்சித்துள்ளார். ரஷ்யாவுக்கு எதிராக வலுவான தடைகள் வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார். அவர் மேலும் கூறுகையில்,

"அமெரிக்காவின் மௌனமும், உலகின் பிற நாடுகளின் மௌனமும் மட்டுமே புடினை ஊக்குவிக்கின்றது. இதுபோன்ற ரஷ்யாவின் ஒவ்வொரு தீவிரவாத தாக்குதலும், ரஷ்யா மீதான பொருளாதாரத்தடைக்கான போதுமான காரணங்களே." என்று தெரிவித்தார்.

உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியின் தலைமைத் தளபதி ஆண்ட்ரியெர்மர் கூறுகையில், "அழுத்தம் இல்லாமல் இங்கே எதுவும் மாறாது. ரஷ்யாவும் அதன் நட்பு நாடுகளும் மேற்கத்திய நாடுகளில் இதுபோன்ற மரணங்களை நிகழ்த்தவே படைகளை உருவாக்கும். ஆயுதங்களை உற்பத்தி செய்யும் திறன் இருக்கும் வரை ரஷ்யா தொடர்ந்து போராடும்" என்று தெரிவித்தார்.

மறுபுறம், 95 உக்ரைனிய ட்ரோன்களை தாக்கி அழித்ததாகவும், அவைகளில் 12 ட்ரோன்கள் மாஸ்கோ அருகே இடைமறிக்கப்பட்டன எனவும் ரஷ்யா கூறியுள்ளது. 30 நாள்கள் போர் நிறுத்தத்துக்கு உக்ரைன் வழியுறுத்தி வரும் நிலையில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதனிடையே, கைதிகள் பறிமாற்றம் குறித்து முடிவுக்கு வந்த இரு தரப்பினரும், தலா 1000 பேரை பறிமாற்றிக்கொண்டுள்ளனர்.

# ஐரோப்பிய ஒன்றியத்துடனான பேச்சுக்கான காலவரையறை நீடிப்பு

## டொனால்ட் ட்ரம்ப் அறிவிப்பு

ஐரோப்பிய ஒன்றியத்துடன், வரிகள் தொடர்பான பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கான காலத்தை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், நீடித்துள்ளார். அதன்படி, ஜூன் மாதம் 9 ஆம் திகதி வரை காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவர், நேற்றையதினம் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புடன், சிறந்ததொரு பேச்சுவார்த்தை எட்டப்பட்டதாகக் கூறியதைத் தொடர்ந்து இந்த காலவரையறை நீடிக்கப்பட்டதாகத் தெரிவித்தார்.



கடந்த மாதம் ஐரோப்பிய ஒன்றிய பொருள்களுக்கு 20 சதவீத வரியை அமெரிக்க ஜனாதிபதி விதித்திருந்தார். பின்னர் அந்த வரி 10 சதவீதத்தால் குறைக்கப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை ஐரோப்பிய ஒன்றியத்துடனான பேச்சுவார்த்தையில் திருப்தியடையாத நிலையில், 50 சதவீத வரிகளை விதிக்கவுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி அச்சுறுத்தினார்.

இது தொடர்பில் கலந்துரையாடல் ஒன்றை நடத்தத் திட்டமிட்டிருந்த போது அதற்கான கால எல்லையை ஜூன் மாதம் 9ஆம் திகதி வரை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நீடித்துள்ளார்.

கனடா முரசு
திங்கட்கிழமை 26/05/2025

## கனடாவில் சத்குருவிற்கு குளோபல் இந்தியன் விருது

கனடாவில் உள்ள ஒன்டாரியோ நகரில் நடைபெற்ற விழாவில் சத்குருவிற்கு விருது வழங்கப்பட்டது.

கனடா - இந்தியா அறக்கட்டளை ( சி.ஐ.எப்) உல 03



# கனடாவில் முதல் முறையாக ஏ.ஐ. அமைச்சர் நியமனம்

கனடாவின் முதல் செயற்கை நுண்ணறிவு அமைச்சராக எவன் சாலமன் நியமிக்கப்பட்டுள்ளார்.

2025 மே 13 அன்று, கனடா தனது வரலாற்றில் முதன்முறையாக செயற்கை நுண்ணறிவு மற்றும் டிஜிட்டல் புதுமை அமைச்சராக எவன் சாலமனை நியமித்துள்ளது.

ஒட்டாவாவில் உள்ள ரிடோ ஹாலில் நடைபெற்ற சத்தியப்பிரமாணம் எடுத்துக் கொள்ளும் விழாவில், ரொறன்ரோ சென்டர் தொகுதியைச் சேர்ந்த புதிய நாடாளுமன்ற உறுப்பினரான சாலமன் பதவியேற்றார். 02





# கனடா வெளியுறவு அமைச்சருடன் எஸ். ஜெய்சங்கர் பேச்சுவார்த்தை

கனடா வெளியுறவு அமைச்சர் அனிதா ஆனந்துடன் இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் முதல்முறையாக தொலைபேசியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை உரையாடினார்.

அண்மையில் கனடா பொதுத் தேர்தலில் லிபரல் கட்சி வெற்றி பெற்றதைத்தொடார்ந்து, அக்கட்சியின் தலைவா் மாா்க் காா்ணி பிரதமராகப் பதவியேற்றாா். இதையடுத்து புதிய அமைச்சரவையில் இந்திய 02



# ஒன்ராறியோவில் இடம்பெற்ற விபத்தில் ஐவர் உயிரிழப்பு

கனடாவின் ஒன்ராறியோ மாகாணத்தில் உள்ள மிடில்செக்ஸ் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் நான்கு மாணவிகளும் பாடசாலை பணியாளர் ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.

புருஷ் Bruce கவுன்டியில் உள்ள Walkerton District Community School (WDCS) பாடசாலையின் மாணவர்களே உயிரிழந்துள்ளனர்.

தோரொன்டேல் ரோடு மற்றும் கோபல் ஹில்ஸ் Hills ரோடு சந்திக்கும் பகுதியில், தேமஸ் சென்டர் பகுதியில் இடம்பெற்றுள்ளது.



இரண்டு SUV வாகனங்கள் மற்றும் ஒரு லொறியொன்றும் மோதிக்கொண்டதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. முதல் SUVயில் இருந்த 33 வயது ஆண் ஒருவர் கடுமையான காயங்க ளுடன் மருத்துவமனையில் அனும திக்கப்பட்டபோதும், பின்னர் உயிரி ழந்தார்.

இதே வாகனத்தில் பயணித்த மற்ற மூன்று பேர் (இரு 17 வயது மாணவிகள் மற்றும் ஒரு 16 வயது மாணவி) சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

ஐந்தாவது பயணியான 16 வயது மாணவி ஒருவர், விமானம் மூலம் மருத்துவமனைக்கு கொண்டு செல லப்பட்டபோதும், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இந்த ஐந்து பேரும் Walkerton District Community Schoo lஐ சேர்ந்தவர்கள் என்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இரண்டாவது SUVயின் சாரதியும் பயணியும், மற்றும் லொறியின் சாரதியும் சிறிய அளவிலான காயங்களுடன் உயிர்தப்பியுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

## கனடாவில் முதல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமர் மார்க் கார்ணியின் தலைமையில் உருவாக்கப்பட்ட இந்த புதிய அமைச்சகம், கனடாவை செயற்கை நுண்ணறிவில் உலகத் தரத்தில் முன்னிலை வகிக்க வைக்கும் என்ற நோக்கத்துடன் தொடங்கப்பட்டுள்ளது.

எவன் சாலமன், செயற்கை நுண்ணறிவு கொள்கை வடிவமைப்பு, தொழில்துறைகளில் AI பயன்பாட்டை ஊக்குவித்தல், மற்றும் தனியுரிமை, பாதுகாப்பு ஆகியவை ஆகியவற்றுக்கு சமநிலை ஏற்படுத்துதல் போன்ற பல முக்கிய பொறுப்புகளை ஏற்கிறார்.

தெற்கு ஒன்ராறியோவின் பொருளாதார வளர்ச்சிக்கும் அவர் பொறுப்பாவார்.

சாலமனின் ஊடக அனுபவம் அவரை ஒரு திறமையான தகவல் தொடர்பாளராக மாற்றியுள்ளது.

மேலும், கனடாவிலேயே AI உள்கட்டமைப்புகளை உருவாக்கும் திட்டங்கள் - குறிப்பாக தரவகுப்பு மையங்கள் மற்றும் அதிவேக தகவல்தொடர்பு வளங்கள் AI துறையில் நாட்டின் பங்களிப்பை பாதுகாக்க உதவுகிறது.

இந்த புதிய அமைச்சு தொழில்நுட்பத்தில் கனடாவின் வரலாற்றிலேயே மைல்கல்லாக அமைகிறது.

## கனடா வெளி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வம்சாவளியைச் சேர்ந்த அனிதா ஆனந்த் வெளியுறவுத் துறை அமைச்சராகப் பதவியேற்றார்.

இந்நிலையில், முதல்முறையாக அமைச்சர்கள் எஸ்.ஜெய்சங்கரும் அனிதா ஆனந்தும் நேற்று ஞாயிற்றுக்கிழமை தொலைபேசியில் உரையாடினர். இந்தியா - கனடா இடையிலான பொருளாதார உறவை மேலும் வலுப்படுத்தி, இருநாடுகளும் முன்னுரிமை அளிக்கும் விவகாரங்களில் முன்னேற்றத்தை ஏற்படுத்தும் நோக்கில் அவர்கள் உரையாடினர்.

இதுதொடர்பாக அமைச்சர் ஜெய்சங்கர் ‘எக்ஸ்’ தளத்தில் வெளியிட்ட பதிவில், இந்தியா - கனடா உறவில் உள்ள வருங்கால எதிர்பார்ப்புகள் குறித்துப் பேசியதாக தெரிவித்தார்.

அனிதா ஆனந்த் ‘எக்ஸ்’ தளத்தில் வெளியிட்ட பதிவில், இந்தியா - கனடா உறவை வலுப்படுத்த ஜெய்சங்கருடனான கலந்துரையாடல் ஆக்கபூர்வமாக இருந்தது என்று குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 2023 ஆம் ஆண்டு கனடாவில் காலிஸ்தான் பிரிவினைவாதி ஹார்தீப் சிங் நிஜ்ஜார் கொல்லப்பட்ட சம்பவத்தில் இந்திய உளவாளிகளுக்கு தொடர்பிருப்பதாக முன்னாள் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ குற்றஞ்சாட்டினார்.

இதைத்தொடர்ந்து இந்தியா - கனடா உறவில் விரிசல் ஏற்பட்ட நிலையில், முதல்முறையாக அமைச்சர்கள் ஜெய்சங்கர், அனிதா ஆகியோர் தொலைபேசியில் பேசியுள்ளனர்.



# ஸ்கார்பரோ ஆரோக்கிய வலையமைப்புக்கு ரோய் ரத்னவேல் 1 மில்லியன் டொலர் நன்கொடை

கனடாவில் மனநலப் பிரச்சினைகள் உள்ளவர்களுக்கு ஆதரவளிக்கும் அமைப்பான ஸ்கார்பரோ ஆரோக்கிய வலையமைப்புக்கு ஈழத்தமிழரும் வணிக நிர்வாகியுமான ரோய் ரத்னவேல் மற்றும் அவரது மனைவி சூ நாதன் ஆகியோர் 1 மில்லியன் டொலர்களை நன்கொடையாக வழங்கியுள்ளனர்.

ரோய் ரத்னவேல், 1969ஆம் ஆண்டு யாழ்.வடமராட்சியில் பிறந்தார்.

17 வயதில் அவர் ஒரு அரசியல் கைதியாக கைது செய்யப்பட்டு, பின்னர் சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டவுடன் கனடா சென்றார்.

தற்போது கனடாவின் மிகப்பெரிய சுயாதீன சொத்து மேலாண்மை நிறுவனத்தில் ஒரு நிர்வாகியாக அவர் உள்ளார்.

இந்நிலையில், கனடாவில் மனநலப் பிரச்சினைகள் உள்ளவர்களுக்கு தேவைப்படும் ஆதரவை வழங்க ரோய் ரத்னவேல் முன்வந்துள்ளார்.




## கனடாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களவில் தலைமைப் பண்பு மற்றும் தொலைநோக்கு பார்வையோடு மனித குல மேம்பாட்டிற்காக இயங்கி வரும் இந்திய வம்சாவழி பேராளுமைகளை அடையாளம் கண்டு ஆண்டுதோறும் குளோபல் இந்தியன் விருதினை வழங்கி கௌரவித்து வருகிறது.

அந்த வகையில் 2025 ஆம் ஆண்டுக்கான விருது ஈஷா அறக்கட்டளை நிறுவுனர் சத்குருவிற்கு அறிவிக்கப்பட்டது.

அதன்படி, கனடாவில் உள்ள ஒன்டாரியோ நகரில் கடந்த வாரம் நடைபெற்ற விழாவில் கனடா இந்தியா அறக்கட்டளையின் தலைவர் ரிதேஷ் மாலிக், கனடாவில் இயங்கும் ஐ.சி.ஐ.சி.ஐ. வங்கியின் தலைவர் ஹிமதர் மதி பத்லா மற்றும் கோதாரி குழுமத்தின் தலைவர் நார்டன் கோதாரி ஆகியோர் சத்குருவிற்கு இவ்விருதினை வழங்கினர்.

உலகளவில் சுற்றுச்சூழல் சவால்களைச் சமாளிக்கும் வகையில் சத்குரு மேற்கொண்டு வரும் பணிகளைப் பாராட்டியும், விழிப்புணர்வான உலகை உருவாக்க அவர் மேற்கொண்டு வரும் பணிகளை அங்கீரிக்கும் விதமாகவும் இந்த விருது அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து கனடா இந்தியா அறக்கட்டளை தனது எக்ஸ் தள பதிவில், "கனடா இந்தியா அறக்கட்டளையின் ஆண்டின் சிறந்த உலகளாவிய இந்தியர் விருதை சத்குரு ஏற்றுக்கொண்டதற்கு, இந்திய - கனடிய சமூகத்தின் சார்பாக மிக்க நன்றி. விழிப்புணர்வான மற்றும் கருணைமிக்க மனிதகுலமே முன்நோக்கி இருக்கும் பாதை எனும் சத்குருவின் கருத்து ஆழமாக எதிரொலிக்கிறது " எனத் தெரிவித்துள்ளது.

சத்குரு தனது எக்ஸ் தள பதிவில், "கனடா மற்றும் இந்திய நாடுகளின் வளர்ச்சி மற்றும் செழிப்புக்கு இந்திய சமூகம் பங்களிப்பதை பார்ப்பதற்கு மகிழ்ச்சியாக உள்ளது. உங்கள் அரவணைப்பு மற்றும் விருந்தோம்பலுக்கு மிகவும் நன்றி" எனத் தெரிவித்துள்ளார்.